சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 1ம்பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பொது நடைபாதை சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என் வீட்டிற்கு மேல்பக்கம் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட மனையும், வீடும் உள்ளது என்றால் சரிதான். கீழ்பக்கம் உள்ள என் வீடு 1971ம் ஆண்டு எனது தாயாரால் கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரிதான். என் அம்மா இறந்த பிறகு சொத்தை எந்த வருடம் பங்கு வைத்து கொண்டோம் என வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என் அம்மா 1971ல் கிரையம் வாங்கிய சொத்து விபரம், எல்கை மால் அனைத்தும் பிரதிவாதியின் சொத்தின் கீழ்பக்கம் உள்ள எனது வீட்டை மட்டும் தான் குறிக்கும் என்றால் சரிதான். என் அம்மா வாங்கிய கிரையபத்திரத்தில் தெற்கே நடைபாதை என மட்டுமே சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ1 ஆவணத்தில் எந்த இடத்திலும் பொது நடைபாதை என சொல்லப்படவில்லை என்றால் சரிதான். தளத்தில் உள்ளது. நான் 1971ம் ஆண்டு ஆவணத்தை அடிப்படையாக வைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என் தாயார் வாங்கிய கிரைய ஆவணத்தில் வழிபாதை எவ்வளவு என அளவீடு எதுவும் சொல்லப்படவில்லை என்றும், வழக்கு தாக்கல் செய்வதற்காக வழிபாதை 5 லிங்ஸ் என மோசடியாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்குரையில் என் அம்மா 5லிங்ஸ் பொதுபாதை என கிரையம் வாங்கியுள்ளதாக இல்லாத விபரங்களை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 1971 ஆவணத்தில் நடைபாதை என சொல்லியிருப்பது எங்கள் இடத்தை மட்டும் தான் கட்டுப்படுத்தும் என்றும், பிரதிவாதியின் இடத்தை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. கிழமேல் பாதைக்கு கிழக்கே செல்வதற்கு பாதை உள்ளதா என்றால் இல்லை. என்

வீட்டோடு பாதை முடிகிறது. கிழமேல் பாதை என்பது கிழக்கே சொல்லும் பாதை என்றும், வழக்கிற்காக நான் மேற்கே செல்லும் பாதை என சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. வழக்கு 1ம் லக்க சொத்து பொதுபாதை என காட்டுவதற்கு எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் தாக்கல் செய்த கிரைய ஆவணத்தில் உள்ளது. பிரதிவாதி ரபிலா அவரது சொத்தை கிரையம் வாங்கி அனுபவம் செய்து வருவதில் எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். காம்பவுண்ட் சுவருக்கு வடக்கில் ஒரு அடி இடம் இருப்பதாக வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றும், அதற்கான ஆவணம் தாக்கல் செய்ய வில்லை என்றால் அந்த ஒரு அடி பாதையானது பொதுபாதைக்காக அந்த வீட்டின் உரிமையாளர் காண்பித்துள்ளார். வழக்குரையில் 1,2 லக்க சொத்துக்களுக்குரிய அளவுகள் உத்தேசமாக நானாக எழுதி கொண்டது என்றால் அங்கு இருக்கும் அளவுகளை சொல்லியுள்ளேன். பிரதிவாதி கிரையம் வாங்கி பெற்ற சொத்து படி அவர் வீடு கட்டி அனுபவம் செய்து வருவதில் எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை. பொதுபாதையை ஆக்கிரமித்து வீடு கட்ட கூடாது. வா.சா.ஆ 7 ஆவணத்தில் தெற்கு பக்க எல்கையாக தபசில் மனைக்கு பாத்தியப்பட்ட பொதுபாதை என காட்டப்பட்டுள்ளது என்றால் அது தவறாகும். பிரதிவாதிகளுக்கு மட்டுமே பாத்தியப்பட்ட பொதுநடைபாதையில் நான் தவறான உரிமை கொண்டாடி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் முன் ஆவணம் அனைத்திலும் பாதை அவர்களுக்கு மட்டும் பாத்தியப்பட்டது என சொல்லப்பட்டுள்ளது என்றும், எனது முன் ஆவணத்தில் பொதுபாதை என சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு மட்டும் பாத்தியப்பட்ட பொது நடைபாதையில் அதற்கு முன்னர் வாய்க்கால் மட்டுமே இருந்தது என்றால் சரியல்ல. 15 அடி அகலத்திற்கு பாதை தான் இருந்தது. வாய்க்கால் நடைபாதை

3 அடி அளவில் இருந்தது என்றால் சரியல்ல. 15 அடி அகலத்தில் இருந்தது. வாய்க்கால் வழிநடைபாதை 3 அடி அளவில் தான் இருந்தது என்றும், எனது வழக்கிற்கு விரோதமாக 15 அடி இருந்ததாக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. என் வீட்டிற்கு மேற்குபக்கத்தில் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட இரண்டு கட்டிடங்கள் உள்ளது என்றால் சரியல்ல. 10 அடி பாதை உள்ளது. அந்த பாதைக்கு மேற்குபக்கத்தில் பிரதிவாதிகள் வீடு உள்ளது. என் வீட்டிற்கும், பிரதிவாதி வீட்டிற்கும் நடுவே தென்வடலாக ஒரு முடுக்கு செல்கிறது என்றால் முடுக்கு உள்ளது. அது என்னுடைய இடமாகும். முடுக்கிற்கு மேல்பக்கம் உள்ள வீட்டிற்கு போய் வர தான் அந்த பாதை உள்ளது என்றும், எனக்கு அந்த இடத்தில் பொதுபாதை எதுவும் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி அவரது வசதிக்காக சென்று வரவும், வாகனங்களை கொண்டு வரவும் பாதை அமைத்துள்ளார்கள் என்றும், எனக்கு பாதை எதுவும் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியால் கட்டப்பட்டுள்ள கட்டுமானங்கள் அனைத்தும் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட இடத்தில் தான் கட்டப்பட்டுள்ளது என்றும், அதனை இடிக்க வேண்டும் என கோருவதற்கு எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. எனக்கு கிழக்கு பக்கம்தான் பாதை உள்ளது என்றும், மேற்கு பக்கம் தென்வடலாக ரோடு செல்வதால் நான் பொதுபாதை இருப்பதாக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. நான் மேல்பக்கம் செல்வதற்கு எனக்கு எவ்வித வழி உரிமையும் , பாதையும் இல்லை என்றால் சரியல்ல. 1971 ம் ஆண்டு முதல் அந்த பாதையை தான் பயன்படுத்தி வருகிறேன். 1ம் லக்க சொத்தில் நான்கு சக்கர வாகனம் செல்வதற்கு இயலாது என்றால் சரியல்ல. அது குறுகலான பிரதிவாதிக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்றும், அதில் நான்கு சக்கர வாகனம், இரண்டு சக்கர வாகனம் எதுவும் செல்லாது என்றால் சரியல்ல. பிரதிவாதி கிரைய ஆவணம், முன் ஆவணத்திலும் பிரதிவாதிக்கு மட்டும் பாதை என சொல்லப்பட்டுள்ளதால் அதற்கு விரோதமாக

நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் கிரைய ஆவணத்தின் அடிப்படையில் அளந்து பார்ப்பதற்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் ஏற்கனவே அளந்து பார்க்கப்பட்டு விட்டது. 1,2 லக்க சொத்தில் காண்பிக்கப்பட்டுள்ள பொதுபாதை என்பது தவறானது என்றால் சரியல்ல. பிரதிவாதி அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை அனுபவம் செய்வதற்கு நான் தான் தொடர்ந்து இடையூறு செய்கிறேன் என்றால் சரியல்ல. 3 அடி அளவில் கிழமேலாக பிரதிவாதிகளுக்கு பயன்படுத்தபடும் இடம் போக மீதி இடம் பிரதிவாதியால் கிரையம் வாங்கப்பட்ட இடம் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்கோரூரிமை அனுமதிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல. வழக்கு மத்தியில் நானும், என் சகோதரர்களும் சேர்ந்து முன் உரிமை ஆவணத்தில் இல்லாத பொதுபாதையை பொதுபாதை என காண்பித்து ஏற்படுத்தப்பட்ட ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல.

(1ம் பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணையை 2ம் பிரதிவாதி தரப்பில் ஏற்றுக்கொள்ளவதாக தெரிவிக்கப்பட்டது)

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.